Ts8T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022**

-----

**வகுப்பு 8**

காலம்: 2.30 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **15×1=15**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ................
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ................
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) செவ்விந்தியர்கள் நிலத்தை ................ மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

4) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ................
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

5) புகழாலும் பழியாலும் அறியப்படுவது ................
அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

6) உடல்நலம் என்பது ................ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

7) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ................
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

8) கற்றவருக்கு அழகு தருவது ................
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

9) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ................
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

10) பசியால் வாடும் ................ உணவளித்தல் நமது கடமை.
அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

11) கண்ணோடாது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) கண்+ஓடாது ஆ) கண்+ணோடாது
இ) க+ஓடாது ஈ) கண்ணோ+ஆடாது

12) என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ................பெருகிற்று.
அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

13) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ................
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

14) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ................
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

15) பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ................
அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு

**II. பொருத்துக:** **5×1=5**

16) பெயரெச்சத்தொடர் - கார்குழலி படித்தாள்
17) வினையெச்சத்தொடர் - புலவரே வருக
18) வினைமுற்றுத்தொடர் - பாடி முடித்தான்
19) எழுவாய்த் தொடர் - எழுதிய பாடல்
20) விளித்தொடர் - வென்றான் சோழன்

**III. கீழ்க்கண்ட வினாக்களில் ஏதேனும் பத்தினுக்கு மட்டும் விடையளி:** **10×2=20**

21) எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக.
22) பகத்சிங் கண்ட கனவு யாது?
23) சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?
24) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

www.Padasalai.Net www.CBSEtips.in



25) தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

26) சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?

27) எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் எனக் கூறுகிறோம்?

28) நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

29) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

30) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

31) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?

32) சான்றோர்க்கு அழகாவது எது?

33) வினைமுற்று என்றால் என்ன?

34) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

35) ஓவிய எழுத்து என்றால் என்ன?

**IV. கீழ்க்கண்ட வினாக்களுள் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி: 5×5=25**

36) தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

37) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

38) காப்பியக்கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

39) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

40) வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்புநலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

41) கொங்கு நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

42) நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?

43) எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**V. கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளி: 1×7=7**

44) எழுத்துக்களின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

தமிழக கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**VI. கீழ்க்காணும் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக: 6+4=10**

45) ''வழிவர் சிலர்'' எனத் தொடங்கி ''என நடுங்கியே'' என முடியும் படைவேழம் பாடலை எழுதுக.

46) ''இதனை'' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

''இறைக்கு'' என முடியும் குறளை எழுதுக.

**VII. கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் கட்டுரை எழுதுக: 1×10=10**

47) நூலகம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுக.

**VIII. பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக: 2×1=2**

48) அதைச் செய்தது நான் அன்று.

49) பகைவர் நீவிர் அல்லர்.

ஏ.வசந்குமார், மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம்-627809
தென்காசி மாவட்டம்.

**IX. கலைச்சொல் தருக: 2×1=2**

50) Loom -

51) Stitch -

**X. தொடர்களை மாற்றி எழுதுக: 2×1=2**

52) காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சி தொடராக மாற்றுக)**

53) முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? **(செய்தித் தொடராக மாற்றுக)**

**XI. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக: 2×1=2**

54) வட்டெழுத்து எனப்படும் தமிழ் வளைந்த கோடுகளால் அமைந்த எழுத்து.

55) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com